**1990 சுவஸரிய மன்றம் - 2025**

-----------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

1990 சுவஸரிய மன்றத்தின் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

மன்றத்தின் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலாப நோக்கம் கொண்டிருக்காத அமைப்புகளுக்காக பரிந்துரைக்கப்பட்ட கணக்கீட்டு பரிச்சயங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலாப நோக்கம் கொண்டிருக்காத அமைப்புகளுக்காக பரிந்துரைக்கப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, மன்றம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பு ஒன்றாகக் காணப்படுவதுடன் முகாமைத்துவமானது மன்றத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் சுவஸரிய மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மன்றத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிதியத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- மன்றத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- மன்றத்தின் ஆளுகை சபையினால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்பட்டிருந்ததா என்பதும்,

- மன்றமானது தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்,

- மன்றமானது வளங்களை கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2018 இன் 18 ஆம் இலக்க 1990 சுவஸரிய மன்றச் சட்டத்தின் உபபிரிவுகள் 18(5) மற்றும் 25(1) | சட்டத்தின் பிரிவு 18 (5) இன் பிரகாரம், முகாமைத்துவ சபையினால் நிதியிலிருந்து செய்யப்படும் கொடுப்பனவுகள் தொடர்பான விதிகளை வகுக்க வேண்டும், மேலும் உபபிரிவு 25(1) இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக விதிகள் தயாரிக்க முடியும். அவ்வாறு மன்றத்தினால் தயாரிக்கப்படும் அனைத்து விதிகளும் அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அதன்படி செயற்பட்டிருக்கவில்லை | நிதிசார் விதிகள் ஏற்கனவே உருவாக்கப்பட்டு, அனுமதிக்காக பொது முயற்சிகள் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. மேலும், இச்சட்டத்தின் பிரிவு 25(1) இன் கீழ் உருவாக்கப்படக்கூடிய விதிகள் குறித்த சட்ட ஆலோசனையும் பெறப்பட்டு, அவ்வறிவுறுத்தலின் படி அடுத்தகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | நிதியத்திலிருந்து பணம் செலுத்துவது தொடர்பான விதிகள் வகுக்கப்பட்டு, அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டு, வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் உபபிரிவு 38(2) | சட்டத்தின் உபபிரிவு 38(1) இன் பந்தி (இ) இற்கு இணங்க நிதிக்கட்டுப்பாட்டிற்காக நிறுவப்பட்ட உள்ளகக் கட்டுப்பாட்டு அமைப்பின் செயல்திறன் மீளாய்வு எழுத்துமூலமாக மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மன்றம் அதன்படி அதற்கேற்ப செயற்பட்டிருக்கவில்லை. | உள்ளக நிர்வாக முடிவுகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. எதிர்காலத்தில் இத்தகைய எழுத்துப்பூர்வமான முடிவுகளைச் சமர்ப்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. | உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் செயல்திறன் குறித்த ஆய்வு எழுத்துப்பூர்வமாக மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதுடன் அதன் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 880 | அரச பணம் பண்டங்கள் பெற்றுக்கொள்ளல் அல்லது பொறுப்பாக இருத்தல், அவ்வாறின்றேல் பண்டங்கள் வழங்குவது தொடர்பாக நிருவாகம் ரீதியாக பொறுப்பாக இருக்க வேண்டிய உத்தியோகத்தர்களும், அரச கணக்குகளுக்குரிய உறுதிச்சீட்டுக்களை சான்றுபடுத்துபவர்களும், காசோலைகளில் கையொப்பமிடுபவர்களும் அவர்களின் கடமை அலுவல்கள் நேர்மையாக மேற்கொள்ளப்படுகின்றதென 612 ஆவது அதிகாரமாகிய அரச உத்தியோகத்தர்களின் பிணைக் கட்டளைச் சட்டத்திற்கு இணங்க பிணை வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மன்றத்தில் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக அதன்படி செயற்பட்டிருக்கவில்லை. | எதிர் காலத்தில் குறிப்பிட்ட பிணைப் பணம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பிணைத் தொகை செலுத்த வேண்டிய உத்தியோகத்தர்கள், பிணை தொடர்பான கட்டளைச் சட்டத்தின் விதிகளுக்கு இணங்க அதனைச் செய்ய வேண்டும். |
| (ஈ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கை இலக்கம் 01/2021 இன் மூலம் அறிமுகப்படுத்தப் பட்டது. | | | |

| | | | |
|---|---|---|---|
| (i) வழிகாட்டல் கோவையின் பந்தி 2.3 | மன்றத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக செயல் நடவடிக்கைத் திட்டமொன்றுடன் வருடாந்த பாதீட்டுடனான மூலோபாயத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அந்தத் திட்டம் குறிப்பிட்ட வரிசை அமைச்சுச் செயலாளர் ஊடாக அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதன்படி செயற்பட்டிருக்கவில்லை. அங்கீகரிக்கப்பட்டிருக்காத செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்தத் திட்டம் வழிகாட்டலுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2025 மற்றும் 2026 ஆகிய இரு ஆண்டுகளுக்கும் இந்த மூலோபாயத் திட்டத்தை வடிவமைத்துச் சமர்ப்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது | தொடர்புடைய திட்டங்களைத் தயாரிப்பதோடு அனுமதிகளைப் பெற்று, அவற்றின் அடிப்படையில் செயல்பாடுகளைச் செயல்படுத்த வேண்டும். |
| (ii) செயற்பாட்டுக் கைநூலின் பந்தி 3.3 | ஒவ்வொரு பிரிவுக்குமான நிறுவன அமைப்பு வரைபடம் மற்றும் பணியாளர் தேவைகளை உள்ளடக்கிய ஒரு மூலோபாய மனிதவளத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும் என்றபோதிலும், அதற்கேற்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சட்ட ஆலோசனை மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்தும் ஆலோசனை பெற்ற பின்பு, அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள அவர்கள் உத்தேசித்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. . | மனிதவள மூலோபாய திட்டத்தினை செயற்பாட்டுக் கைநூலிற்கு இணங்க தயாரிக்கப்பட வேண்டும். |
| (iii) செயற்பாட்டுக் கைநூலின் பந்தி 3.6 | மூலோபாயத் திட்டம் மற்றும் செயல் திட்டங்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு பயனுள்ள செயல்திறன் மதிப்பீட்டு முறை அறிமுகப்படுத்தப்பட வேண்டும். அத்துடன், ஊழியர்களுக்கும் முகாமைக்குமிடையே பிரதான செயல்திறன் குறிகாட்டிகள் | தற்போதுள்ள செயல்முறை மற்றும் எழுத்துப்பூர்வமான ஆவணங்களைப் பயன்படுத்தி ஊழியர்களின் செயல்திறனை மதிப்பிடுவதும், வருடாந்த சம்பள ஏற்றத்திற்கான கட்டமைப்பை உருவாக்குவதும் | திட்டங்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு வினைத்திறனான செயல்திறன் மதிப்பீட்டு முறை அறிமுகப்படுத்தப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். ஒவ்வொரு ஊழியரின் உற்பத்தித்திறனையும் அவரது நேரடி மேற்பார்வையாளர் மதிப்பீடு செய்வார் என்று எதிர்பார்க்கப்பட்டாலும், இந்த நிறுவனம் தனது அதிகாரிகளுக்கான செயல்திறன் மதிப்பீடுகளைப் பயனுள்ள வகையில் மேற்கொள்ளவில்லை. மேலும், சுவஸரிய மன்றம் ஊழியர்களுக்கான சம்பளக் கட்டமைப்பு 2019 ஓகஸ்ட் 01 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், வருடாந்த சம்பள ஏற்றத்திற்கான எந்தவொரு கட்டமைப்பும் அங்கு நடைமுறையில் இருக்கவில்லை. | இதன் மூலம் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | |
| (உ) | அரச கணக்குகள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தினால் 2022 ஜுலை 8 ஆம் திகதி வெளியிடப்பட்ட வழிகாட்டுதல் இலக்கம் SA/MAA/GRG/01 | மன்றத்திற்கான நன்கொடைகள் முதலில் திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டு, அங்கிருந்து திறைசேரி பிரதிச் செயலாளரின் உத்தியோகபூர்வ கணக்கிற்கு மாற்றப்பட வேண்டும். மேலும், தேசிய பாதீட்டுத் திணைக்களத்தினால் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து, அத்தொகை திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்திடம் இருந்து கோரப்பட வேண்டும். இவ்வாறான நடைமுறைகள் இருந்தபோதிலும், 2025 ஆம் ஆண்டில் பெறப்பட்ட ரூபா 2,153,480 பெறுமதியிலான நன்கொடை நிதியானது, குறிப்பிடப்பட்ட வழிகாட்டுதல்களின்படி திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது வரைவு செய்யப்பட்டு அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதி விதிகளில், இன்நன்டிகாடைகளை கணக்கில் கொள்வதற்கான வழிமுறைகள் சேர்க்கப்பட்டுள்ளன. கணக்காய்வு அவதானிப்புகளுக்கு இணங்க நடவடிக்கை எடுப்பதோடு, அதற்கேற்பச் செயற்படவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. | மன்றத்திற்கு வழங்கப்படும் நன்கொடைகள் திறைசேரிச் செயற்பாட்டுகள் திணைக்களத்திற்கு செலுத்தப்பட வேண்டும். |
| (ஊ) | 2018 ஏப்ரல் 24 திகதி சுகாதார | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2025 திசெம்பர் | தேசிய பாதீட்டுப் பணிப்பாளர் | அமைச்சரவைக்குத் தெரியப்படுத்திய |

| | | | | |
|---|---|---|---|---|
| | அமைச்சிற்கும் GVK EMRI Lanka (Private) Ltd நிறுவனத்திற்கும் இடையே கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் 2018 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க 1990 சுவஸரிய அறக்கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26(இ) | 31 ஆம் திகதியன்று உள்ளவாறான நிலுவை ரூபா 466,774,480 தொகையினுள் ரூபா 335,091,526 தொகையானது அரசாங்கத்தால் மீளச் செலுத்தப்பட வேண்டிய நடைமுறைச் செலவினங்களைக் குறிக்கிறது. 2018 ஆம் ஆண்டு முதல் நிலுவையில் உள்ளதும் மற்றும் திறைசேரியினால் மீளாய்வாணடு வரை மீளச் செலுத்தப்பட்டிருக்காத 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் 1990 சுவஸரிய அவசர மருத்துவ ஊர்தி சேவையைப் பராமரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினங்களைக் குறிக்கும் ரூபா 330,091,526 தொகையினை அமைச்சரவைக்குத் தெரியப்படுத்திய பின்னரே தீர்க்க வேண்டும் என்று தேசிய பாதீட்டுப் பணிப்பாளர் நாயகத்தினால் 2025 திசெம்பர் 30 ஆம் திகதிய கடித இலக்கம் BD/HRD/111/24/2025 இன் மூலம் அறிவுறுத்தியிருந்த போதிலும், இது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நாயகத்தினால் வெளியிடப்பட்ட 2025 திசெம்பர் 30 ஆம் திகதிய கடித இலக்கம் BD/HRD/111/24/2025 இல் உள்ள அறிவுறுத்தல்கள் மற்றும் விவரங்களின் அடிப்படையில் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும். | பின்னர், நிலுவைத் தொகைகளைச் செலுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (எ) | பெறுகை வழிகாட்டியின் பந்தி 4.1.1 (அ) | குறைந்தது 03 ஆண்டுகளுக்கான எதிர்பார்க்கப்படும் பெறுகை நடவடிக்கைகளை உள்ளடக்கிய ஒரு பிரதான பெறுகை திட்டத்தைத் தயாரிக்க வேண்டிய கட்டாயம் ஒரு நிறுவனத்திற்கு இருந்தபோதிலும், மன்றமானது மீளாய்வாணடிற்கான பெறுகை திட்டத்தினையே தயாரித்திருந்தது. மேலும், அத்திட்டத்தில் மூலதனச் சொத்துகளுக்கான பெறுகை குறித்த | பெறுகை திட்டமும் கால அட்டவணைகளும் மிகவும் கடினமான சூழலில் தயாரிக்கப்பட்டன. மேலும், கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டவாறு, ஒரு பெறுகை திட்டத்தினை தயாரித்து சமர்ப்பிப்பதற்கான எண்ணமும் உள்ளது. | 03 ஆண்டு காலத்திற்குத் திட்டமிடப்பட்டுள்ள பெறுகை நடவடிக்கைகளை உள்ளடக்கிய ஒரு பிரதான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

விவரங்களும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 350,021,993 இற்கான பற்றாக்குறையொன்று காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 53,278,736 தொகையாக காணப்பட்டது. அதன் படி நிதி விளைவுகளின் ரூபா 403,300,729 இற்கான பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. மன்றத்தின் வருமானத்தில் ரூபா 207,490,754 பெறுமதி அதிகரித்திருந்த போதிலும், செயல்பாட்டுச் செலவுகள் ரூபா 610,785,375 தொகையாக அதிகரித்திருந்தமையே இப்பின்னடைவுக்கு பிரதான காரணமாக அமைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் கீழே விழுவதைக் கண்டறியும் திறன் மற்றும் குளுக்கோஸ் மற்றும் லக்டேட் அளவுகளைக் கண்காணிக்கும் திறன் கொண்ட உடலில் அணியக்கூடிய உணரியை உருவாக்குவதற்காக சுவஸரிய மன்றமானது இலங்கை நானோ தொழில்நுட்ப நிறுவனத்துடனும் ஹொங்காங்கில் பதிவு செய்யப்பட்ட ஒரு நிறுவனத்துடனும் ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டது. இத்திட்டம் 3 கட்டங்களைக் கொண்டிருந்தது. கீழே விழுவதைக் கண்டறியும் உணரி மென்பொருளை உருவாக்குதல், உடலின் குளுக்கோஸ் மற்றும் லக்டேட் அளவுகளைக் கண்காணிக்கும் கருவியை வடிவமைத்தல், மற்றும் கண்காணிப்புப் பகுதி மற்றும் கீழே விழுவதைக் கண்டறியும் உணரி ஆகிய இரண்டையும் ஒருங்கிணைக்கும் வகையிலான அணியக்கூடிய கருவி ஒன்றை உருவாக்குதல் ஆகியனவாகும். உணரி மென்பொருள் ரூபா 6,601,850 செலவில் உருவாக்கப்பட்டிருந்த போதிலும், 3 ஆண்டுகளுக்கும் மேலாகக் காலம் கடந்திருந்திருந்தும், மீதமுள்ள பணிகளுக்கு நிதியளிக்க எந்தவொரு நன்கொடையாளரும் கிடைக்காததால் இத்திட்டம் பாதியிலேயே நிறுத்தப்பட்டது. | இத்திட்டம் கைவிடப்படவில்லை. உரிய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் ஒரு நன்கொடையாளர் கிடைத்தவுடன் இத்திட்டம் முழுமையாக நிறைவு செய்யப்படும். | திட்டமிடப்பட்ட காலக்கெடுவிற்குள் திட்டச் செயற்பாடுகள் முடிவடைவதை உறுதிசெய்ய நன்கொடையாளரைக் கண்டறிய அல்லது மாற்று நிதியளிப்பு வழிமுறைகளை அடையாளம் காண நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 பயன்பாடின்றி அல்லது முழுமையாகப் பயன்படுத்தப்படாமல் உள்ள ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மன்றத்தின் அவசர மருத்துவ ஊர்திச் சேவை முகாமைத்துவத்திற்கு செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் இணைக்கப்பட்ட அவசர மருத்துவ ஊர்தி (Connected Ambulance) திட்டத்திற்காக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தினூடாக 2023 ஆம் ஆண்டில் ரூபா 21,685,500 பெறுமதியான 385 டெப்லெட் கணினிகளும், ரூபா 7,400,000 மதிப்புள்ள 250 அச்சுப்பொறிகளும் வழங்கப்பட்டிருந்தது. இருந்போதிலும், 2026 ஆம் ஆண்டு மார்ச் 16 ஆம் திகதி வரை இத்திட்டத்தைச் செயல்படுத்தத் தவறியமையினால், மொத்தம் ரூபா 29,085,500 பெறுமதியான மேற்கூறிய உபகரணங்கள் பயன்பாடின்றி விளைவற்றுக் காணப்பட்டன. | தேவையான வன்பொருளைப் பெறுவதன் முக்கியத்துவத்தினையும், நன்கொடையாளர்களின் ஆதரவை இழப்பதைத் தவிர்க்க வேண்டியதன் அவசியத்தினையும் உணர்ந்து, நன்கொடையினை ஏற்றுக்கொள்ள முடிவு செய்யப்பட்டது. இந்த முடிவு, நிதித் தடைகள் இன்றி திட்டம் முன்னேறுவதை உறுதி செய்வதோடு, மென்பொருள் செம்மைப்படுத்தும் (Software refinement) பணிகள் தொடரும் அதே வேளையில் ஆயத்தப் பணிகளையும் முன்னெடுத்துச் செல்ல அனுமதிக்கிறது. | நன்கொடையாளர்களின் நன்கொடைகளை வினைத்திறனாகப் பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | தேசிய அளவிலான போட்டி ஏல நடைமுறையின் மூலம் 2025 திசெம்பர் 31 ஆம் திகதியன்று ரூபா 212,046,000 தொகைச் செலவில் விரைவு ஊர்திகளுக்கான 300 நோயாளி கண்காணிப்புக் கருவிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், அவை இன்றுவரை அதற்கான நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இக்கருவிகளைச் செயற்பாட்டிற்குக் கொண்டுவருவதற்கு முன்னதாக, அவற்றுக்கான அத்தியாவசிய முறைமைகளை நிறுவ வேண்டியுள்ளதோடு விரைவு ஊர்திகளுக்குள் அவற்றை உறுதியாகப் பொருத்தி வைப்பதற்கான விசேட பாதுகாப்பு அமைப்பினையும் பொருத்த வேண்டும். இதற்கான ஆயத்தப் பணிகள் தற்போது இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளன. | நோயாளி கண்காணிப்புக் கருவிகள் உரிய நோக்கத்திற்காக உடனடியாகப் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட வேண்டும். |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2025 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதிவியணியினரின் எண்ணிக்கை 1,992 ஆகவும், உண்மையான பதிவியணியினரின் எண்ணிக்கை 1,291 ஆகவும் காணப்பட்டிருந்ததோடு இதனால் 701 பதிவியணியினர்கள் பற்றாக்குறை ஏற்பட்டிருந்தது. மேலும், அங்கீகரிக்கப்பட்ட 42 பதவிகளில் 11 பதவிகள் வெற்றிடமாக இருந்ததோடு இந்த 11 பதவிகள் தொடர்பான பணியாளர்களின் எண்ணிக்கை மொத்தம் 15 ஆகும். இவற்றில், 05 தரப் பகுப்பாய்வாளர் பதவிக்கான வெற்றிடங்கள் 2022 ஆம் ஆண்டிலிருந்தே நிரப்பப்படாமல் இருந்தன. அதேபோல், உதவி விநியோகச் சங்கிலி முகாமையாளர் பதவியும் 2018 ஆம் ஆண்டிலிருந்தே வெற்றிடமாக இருந்தது. மேலும், மீளாய்வாண்டின் போது பிரதம நிறைவேற்று அதிகாரி, நிதித் துறைத் தலைவர் மற்றும் மனித வளம் மற்றும் நிர்வாகத் துறைத் தலைவர் ஆகிய மூன்று உயர் நிர்வாகப் பதவிகள் வெற்றிடமாக இருந்ததோடு இது எதிர்காலச் செயற்பாடுகளைப் பாதகமாகப் பாதிக்கும் அபாயத்தை ஏற்படுத்தியது அவதானிக்கப்பட்டது. | தலைமை நிறைவேற்று அதிகாரி பதவிக்கான விளம்பரம் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது, அதற்கான அடுத்தகட்ட நடவடிக்கைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. மேலும், நிதித் துறைத் தலைவர், மனித வளம் மற்றும் நிர்வாகத் துறைத் தலைவர், மற்றும் பயிற்சி மற்றும் நெறிமுறைத் துறைத் தலைவர் போன்ற முக்கியப் பதவிகளுக்கான விளம்பரங்களை இணையதளத்தில் வெளியிடவும் திட்டமிடப்பட்டுள்ளது. | சிரேஸ்ட முகாமை மட்டம் மற்றும் பிற பதவிகளில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தினால் 2021 நவம்பர் 16 ஆம் திகதி வெளியிடப்பட்ட அரச உடைமையிலான நிறுவனங்களுக்கான செயற்பாட்டு வழிகாட்டி கையேட்டின் பந்தி 6.6 இன் பிரகாரம், ஒவ்வொரு நிறுவனமும் நிதியாண்டும் முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து, அவற்றை வருடாந்த அறிக்கையின் வரைபுடன் கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2026 ஏப்ரல் 21 ஆம் | வரைவு ஆண்டு அறிக்கையினை சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | நிதிக் கூற்றுக்கள் மற்றும் வருடாந்த அறிக்கைகளின் வரைவுகள் ஆகியவை உரிய காலத்திற்குள் கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அத்துடன், 2026 ஜுன் 15 ஆம் திகதி வரையிலும் வருடாந்த அறிக்கையின் வரைபு கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 40(i) இன் பிரகாரம், ஓர் உள்ளகக் கணக்காய்வாளர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன், மன்றத்தின் ஆரம்பம் தொடக்கம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ஓர் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவும் நிறுவப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் பதவிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டவுடன், உள்ளகக் கணக்காய்வுப் பிரிவை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரகாரம் ஓர் உள்ளகக் கணக்காய்வாளர் நியமிக்கப்பட வேண்டும். |